## திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (27.05.2015 முதல் 31.05.2015 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்இ ஆடுதுறை – 612 101**
போன் 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881

==================================================================

தேதி 26.05.15

### கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (22.05.15-25.05.15)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 37-38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 27-28 |
| மேக ஸ்ரீட்டம் | 2-5 |
| ஈரப்பதம் (%) | 65-82 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 7-19 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 27,05,15 | தேதி-2 28,05,15 | தேதி-3 29,05,15 | தேதி-4 30,05,15 | தேதி-5 31,05,15 |
| மழை (மி.மீ) | 0 | 3 | 4 | 0 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 38 | 37 | 37 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 28 | 27 | 27 | 27 | 27 |
| மேக ஸ்ரீட்டம் | 3 | 5 | 5 | 5 | 5 |
| ஈரப்பதம் (%) | 48-68 | 52-70 | 52-70 | 52-70 | 52-70 |
| காற்றின் வேகம் (கி.மீ,மணிக்கு) | 17 | 17 | 17 | 17 | 17 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | தென்மேற்கு |

- 27.05.15 அன்று வானம் சற்று மேகஸ்ரீட்டத்துடன் காணப்படும் 28.05.15 முதல் 31.05.15 வரை வானம் மேகஸ்ரீட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவ 2-4 மி.மீ..

### வேளாண் அறிவுரைகள்

### முக்கிய பயிர்கள் நெல்இ கரும்பு வாழை மற்றும் பருத்தி

**நெல்தரிசு பருத்தி காய்பிடிக்கும் பருவம் ? எள் காய்பிடிக்கும் பருவம் ? நெல் நாற்றங்கால் தயார்செய்தல்**

- குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36 ? ஆடுதுறை 43 ? ஆடுதுறை 45 மற்றும் கோ 51 விதைகளை விதைப்பு செய்வதற்கு முன்பு விதை நேர்த்தி செய்வது அவசியம். நெல் விதைகளை கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் ஸ்ரீலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும்.

- கோடை நெற்பயிரில் தூர் கட்டும் பருவத்தில்இ 1 ஏக்கருக்குத் தழைச்சத்து உரமான 35 கிலோ யூரியாவையும்இ சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து துவவும்.

- சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டிரைசைக்ளோசோல் 200 கிராம் , ஏக்கர் அல்லது கார்பென்டெசிம் 200 கிராம் , ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக கோடை நெற்பயிரில் இலையுறை கருகல் நோய் பரவலாக தென்படுகிறது இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டெசிம் 200 கிராம் அல்லது புரோப்பிகோனோசோல் 200 மி.லி. மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

ஒம்,- வெ. இரவி.

இயக்குநர்

,உண்மை நகல்,

பேராசிரியர்(உழவியல்)